**இலங்கை மன்றம் - 2010**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட உயர்ந்தபட்ச தகவல்களுக்கும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இலங்கை மன்றம் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய கணக்கேடுகளைப் பேணியிருந்தது எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் விளையும் தாக்கங்களைத் தவிர இலங்கை மன்றத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நியாயமகவும் காட்டும் வண்ணம் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நியம இலக்கம் 24 இன் பிரகாரம் அரசாங்கத்திடமிருந்து மூலதன மானியங்களைப் பெற்றுக்கொள்ளும் போது அவற்றினை பிற்போட்ட வருமானமாகக் கருதி மூலதனமாக்கப்பட்டு உரிய சொத்துக்களின் ஆயட்காலம் முழுவதும் பெறுமானத்தேய்வுக் கொள்கைக்குச் சமமாக உரிய மானியத்தினை வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மன்றத்தினால் இதற்கு முரணாக பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து மானியமும் திரட்டு நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) நியம இலக்கம் 18 இற்கு இணங்க முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா. 55,167,011 கிரயமான கட்டிடங்கள், பொறிகள், அலுவலக உபகரணங்களும் பொருத்திகளும் மற்றும் வாகனங்கள் என்பன மீள் மதிப்புச் செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

இலங்கை மன்றம் ஊழியர்களுக்காக இடர் கடன்களையும் விழா முற்பணங்களையும் வழங்கும் வகையில் 22 ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவனத்தின் வசதிகளை வெளித்தரப்பினர்களுக்கு வாடகைக்கு கொடுத்து உழைத்த வருமானத்திலிருந்து நிதிகளை வழங்கி ஆரம்பிக்கப்பட்டு பேணப்பட்டு வருகின்ற கடன் நிதியத்தில் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா. 15,221,429 தொகையான காசு மீதியினை ஐந்தொகையில் தனியாகக் காட்டுவதற்குப் பதிலாக அத்திகதியில் திரண்ட நிதியில் உள்ளடக்கப்பட்டு காட்டப்பட்டிருந்தன.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

2003 ஆம் ஆண்டில் டிப்ளோமா வெளியீட்டுப் பத்திரத்தினை அச்சிடுவதற்காக ஒரு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் செயற்பாடு பூர்த்தி செய்யப்படாமல் அல்லது மீண்டும் கிடைக்காத ரூபா. 87,500 தொகையான முற்பண மீதி ஒன்று காட்டப்பட்டிருந்தது.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

---

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைகள் தொடர்பான சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) 1963 நவம்பர் 30 ஆந் திகதிய 1024எப்/600/20/சீடீ இலக்க அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபத்தின் 9.14 ஆம் பந்தி | மன்றத்தினால் 2009 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுல்படுத்தப்பட்ட அதன் நிதி மற்றும் நிர்வாகக் கையேட்டிற்காக அமைச்சினதும் பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தினதும் இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 371 | ஏதும் நிரந்தர செயற்பணிக்காக ஒரு தடவையில் வழங்கக்கூடிய உச்ச அளவான முற்பண தொகையான ரூபா. 20,000 எல்லையினை மிகைத்து 29 சந்தர்ப்பங்களில் ரூபா. 1,167,625 தொகை முற்பணங்களாக வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. |
| (இ) நிதிப்பிரமாணம் 502(2) மற்றும் 11 ஆவது பின்னிணைப்பு | நிலையான சொத்துக்களை பதிவேட்டுக்கு கொண்டு வருதல் மற்றும் அகற்றுதல் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாததன் அடிப்படையில் ரூபா. 1,185,376 கிரயமான நிலையான சொத்துக்களை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ் ஒவ்வொரு சொத்தும் காணப்படும் இடங்களை இனங்காணும் வகையில் முறைப்படியாக குறீயீடு இடப்பட்ட பதிவேடு இல்லாமையின் காரணமாக சொத்துக்களை இனங்கண்டு நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ12 ஆம் இலக்க சிறந்த கட்டுப்பாடு தொடர்பான சுற்று நிருபத்தின் 9.2 ஆம் பந்தி | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது 2010 ஆம் ஆண்டின்போது நிறுவனத்தினால் 28 ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப் பட்டிருந்தனர். எவ்வாறாயினும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குள்ளேயே நியமிக்கப்பட்டுள்ளனர் என்று தலைவர் தெரிவித்துள்ளார் |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

## 2.1 நிதிசார் மீளாய்வு

### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிகராரம், திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா. 37,000,000 தொகையான மீண்டுவரும் மானியத்தினை கணக்கிற்கு எடுத்துக் கொண்டதன் பின்னர் மீளாய்வாண்டிற்கு மன்றத்தின் செயற்பாடுகளிலிருந்து ரூபா. 14,768,310 பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதுடன் அதனோடெத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா. 11,540,464 ஆக இருந்ததுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கு ரூபா. 3,227,846 ஆல் பற்றாக்குறையில் முன்னேற்றம் ஓன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது. முன்னயை ஆண்டுடன் ஒப்பிடுகையில் பற்றாக்குறை முன்னேற்றம் அடைந்ததற்கு மீண்டுவரும் மானியம் ரூபா. 5,000,000 ஆல் குறைவடைந்தமையும் பராமரிப்புச் செலவுகள், வழங்கல்கள் மற்றும் பாவனைப் பொருள் செலவுகள் ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் என்பன ரூபா 7,409,747 ஆல் அதிகரித்திருந்தமையும் தாக்கமளித்ததாக அவதானிக்கப்பட்டது.

### 2.1.2 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1999 ஒக்டோபர் 8 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றுநிருபத்தின் 1.1.6 ஆம் பந்தியின் பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு தகைமையற்ற உத்தியோகத்தர் ஒருவர் மேலதிக சேவை

அடிப்படையில் இலங்கை தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் உதவிப் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தருக்கு நிரந்தரமாக எரிபொருள் படி ஒன்று 2006 ஆம் ஆண்டிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2004 ஆம் ஆண்டின் போது சனாதிபதியின் செயலாளர் அவர்களினால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் தலைமை அலுவலக கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக ரூபா. 18.74 மில்லியன் பெறுமதியான கேள்வி வழங்கப்பட்டிருந்தது. உரிய அங்கீகாரமின்றி ஒப்பந்தத்தினை நிறுத்தியதன் காரணமாகச் செலுத்தப்பட்ட ரூபா. 3,419,918 தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணத்தினை 2011 யூன் 30 ஆந் திகதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. தற்போது இக்கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட காணி நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை செய்யப்பட்டு வருவதாக தலைவர் தெரிவித்துள்ளார்.

(இ) 2011 யூன் 30 ஆந் திகதி மன்றத்தின் கீழ் ஒரு பிரிவாகச் செயற்பட்டு வந்த இலங்கை தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் 2010 ஏப்ரல் 30 ஆந் திகதியிலிருந்து வெகுசனத் தொடர்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் மன்றத்தினால் அத்திகதியிலிருந்து 2010 திசெம்பர் 31 வரை மீண்டுவரும் செலவாக ரூபா. 13,947,353 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

### 2.1.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றிய பணிப்பாளர் ஒருவர் 2005 யூன் 03 ஆந் திகதியிலிருந்து 2005 ஆகஸ்ட் 21 ஆந் திகதி வரை தனிப்பட்ட விடுமுறையில் வெளிநாட்டுப் பயணத்தில் ஈடுபட்டிருந்ததுடன் அக்காலத்தின் போது அவருக்குச் செலுத்தப்பட்டுள்ள ரூபா. 122,720 படியும் அவரிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா. 161,269 தொகையினையும் உள்ளடக்கிய ரூபா 283,989 தொகையினை 2011 மார்ச் 31 ஆந் திகதி வரையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இலங்கை தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம்

(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், 41 நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்குத் திட்டமிட்டமிடபட்டிருந்தும் 2010 நவம்பர் 01 ஆந் திகதி வரையும் இதில் 19 நிகழ்ச்சித் திட்டங்களின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவனம் பயிற்சிக் கற்கை நெறிகளை நடாத்துவதற்குத் திட்டமிட்டிருந்தும் ஒவ்வொரு கற்கை நெறிகளுக்குமான மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது கற்கை நெறி வருமானமாகிய ரூபா. 4,532,456 தொகையில் 53% ஆகிய ரூபா. 2,417,188 தொகையான மின்சாரச் செலவுகள் உள்ளடக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டிருக்காததுடன் அதற்கிணங்க கற்கை நெறிக் கட்டணமும் இலாப அளவும் சரியாக நிர்ணயிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) இலங்கை தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் அதன் தேவைப்பாட்டிற்காக 2006, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் ரூபா. 13,759,266 செலவு செய்து நவீன உபகரணங்களைக் கொள்வனவு செய்திருந்தது. மீளாய்வாண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட கற்கை நெறிகளை நடாத்துவதற்கு முடியாமையும் உபகரணங்களையும் வசதிகளையும் வாடகைக்கு கொடுத்தல் குறைவடைந்தமையும் காரணமாக உரிய உபகரணங்கள் ஆண்டின் போது விளைவற்று பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) இலங்கை தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் கடந்த 03 ஆண்டுகளுக்கான வருமானங்களை 2007 ஆம் ஆண்டிற்கான வருமானத்துடன் ஒப்பிடும் போது குறைவடையும் போக்கு காணப்பட்டது.

| | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| பயிற்சிக் கற்கை நெறி வருமானம் | 2,588,127 | 2,336,000 | 4,103,931 | 3,927,239 |
| வசதிகளை வாடகைக்கு வழங்குதல் வருமானம் | 9,435,552 | 8,234,461 | 1,734,796 | 605,218 |
| மொத்த வருமானம் | 12,023,679 | 10,570,461 | 5,838,727 | 4,532,457 |
| வருமானம் குறைவடைதல் 2007 இற்கு ஒப்பீடாக | | 12.08% | 51% | 62% |

### 2.2.2 தாமதமடைந்த செயற்திட்டங்கள்

2007 ஒக்டோபர் 20 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2008 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த ரூபா. 8,638,300 (யுஎஸ் டொலர் 78,530) மதிப்பிடப்பட்ட செலவின் கீழ் இடர் ஆபத்தினை குறைக்கும் ஆராய்ச்சி ஆய்வு நடவடிக்கைகளுக்காக ஒக்ஸ்பேம் செயற்திட்டத்தின் செயற்பாட்டுத் திட்டத்தினை உரிய முறையில் தயாரிக்காமையின் காரணமாக 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா. 1,586,761 மீதி எஞ்சியிருந்தது.

### 2.2.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

இலங்கை மன்றத்தின் கற்கை நெறிகளை நிர்வகிக்கும் நடவடிக்கைகளுக்காக நிரந்தர விரிவுரையாளருக்கு 05 செயலாளர்கள் இருந்தும் 06 நிரந்தர விரிவுரையாளர்களின் 2010 ஆம் ஆண்டின் முதல் 06 மாதங்களுக்கான செயலாற்றினைப் பரீசீலனை செய்த போது அவர்கள் விரிவுரைகளுக்குப் பங்குபற்றுதல் குறைந்த மட்டத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------------

கணக்காய்வின்போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) செயற்திட்டங்களை அமுல்படுத்தல்

(ஆ) வாகனப் பயன்பாடு